# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon P M G No. H A 50/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூரு] யாழ்ப்பாணம்:- கர வருஷ மார்கழி மீ உ௦ வ வெள்ளிக்கிழமை (4 ஜனவரி 1952) [இல - எச]


திருக்கேதீச்சரம்

# ஆலயத் திருப்பணிக்கு அடிகோலிய ஆன்றோர்

## பழைய சம்பவங்களை விளக்குங் கட்டுரை

## கோயில் நிலத்தை ஏலத்தில் வாங்கிய வரலாறு

**1893-ம் ஆண்டு மார்கழி மீ 13 உ வெளியான இந்துசாதனத்தில் அதன் கௌரவ பத்திராசிரியர் ஸ்ரீமான் த. கைலாசபிள்ளை அவர்களால் தலையங்க வியாசமாக எழுதப்பட்டு வெளிவிடப்பட்டது**

"இன்றைத் தினம் இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள சைவர்களுக்கெல்லாம ஒரு முக்கியமான தினம். இலங்கைச் சரித்திரத்திலும் குறிக்கப்படவேண்டிய ஒரு சுப தினம். இலங்கைத் தீவில் மாதோட்டத்துக்குச் சமீபத்திலே ஒரு மருந்து இருக்கின்றது, ஒரு தேன் பொது இருக்கின்றது, ஒரு திரவியம் இருக்கின்றது என்றுமுதலிலறிந்து ஸ்ரீலஸ்ரீநாவலரவர்கள் நமக்கெல்லாம் அறிவித்திருந்தார்கள். திருக்கேதீச்சரம் என்னும் சிவாலயத்துக் குரிய நிலத்தை அரசினரிடம் வாங்கி அதில் பழுதுபட்டுப்போயிருந்த ஆலயத்தைப் புதுக்குவிக்க வேண்டுமென்று நாவலரவர்கள் இதற்கு இருபது வருஷங்களுக்கு முன் வெளியிட்ட நாட்டோட்டு இத்தேசத்திலுள்ள சைவர்களெல்லாரும் ஒரே மனதோடு "அடியவர் குறைகள் தீர்த் தாண்டருள்வதே விரதம் பூண்ட" பெருங்கருணைக் கடலாகிய சிவபெருமானது திருவடிகளை நோக்கி அரிய பிரார்த்தனைகள் செய்தனர். இந்த நிலம் முன் இரண்டு முறை வெந்தியில் விற்கும்படி குறிக்கப்பட்டிருந்தது. ஆயினும் சைவர்களுடைய தவம் பலிக்குங்காலம் சிறிதிருந்தமையால் அந்த நேரங்களில் அது விற்கப்படவில்லை. இறுதியில இன்று விற்கும்படி குறிக்கப்பட்டது. ஒன்றரை மாசகாலம், இந்தக் கலியுகத்து நாலாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்துக்குச் சரியாய் நிகழும் விஜய வருஷ கார்த்திகை மீ 29 உ எப்போது பொழுது விடியுமென்று காத்திருந்தவர் அநேகர். அவர்களுடைய மனமெல்லாம் மலர இன்று காலையில் கோழிகள் கூவ மற்றும் பறவைகள் பாடியாடவாரிக்கச் சிவபெருமானுடைய மெஞ்ஞானப் பிரகாசம்போல் ஒளியலரச் சூரியன் உதயமாயினன்.

நித்திய கருமமுடித்துத் திருக்கேதீச்சரநாதருடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டு சைவர்களெல்லாரும் இன்றைக்கு 12 மணிக்கு முன் யாழ்ப்பாணக் கச்சேரியில் வந்து கூடினார்கள். இந்தவிஷயத்திற்போல வேறொன்றிலும் சைவர்கள் ஒற்றுமையுடையவர்களாய்த் திரளவில்லை. நாட்டுக்கோட்டைச் செட்டிமார் சகலரும் அன்று வந்தார்கள். 25 சதம் சம்பாதிக்கிற கூலிக்காரர்தாமும் வந்தார்கள். பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் இந்த நாள் விடுதலை நாளாயிருந்தது. எல்லாரும் ஒற்றுமை யுடையவர்களாய்த் தங்கள் தங்களாலியன்ற பொருளுபகரித்து நாட்டுக்கோட்டை நகரத்தாரையே சைவர்களுடைய உபயோகத்துக்காக அந்நிலத்தை வாங்கும்படி ஏற்பாடு செய்துகொண்டனர்.

கத்தோலிக்க கிறிஸ்தவரும் இந்தச் சமயத்தைத் தப்பவிடவில்லை. இந்த நிலம் சைவக்கோயிலிருந்த நிலமென்பதிற் சந்தேகம் சிறிதுமில்லை. கர்ப்பக்கிருக முதலான மண்டபங்களுடையவும் திசர்தம்ப பீடம் முதலானவற்றினுடையவும் அத்திவாரம் இன்றைக்குங் காணப்படுகின்றது. அத்திவாரத்தினுடைய ஆகிருதவெல்லாம இதுயில நிலம ஆயிரத்தைமபது ... மென்னும் சைவக்கோயிலிருந்து அழிந்தநிலம்" என்று காட்டப்பட்டிருக்கின்றது. இப்படியெல்லாம் இருந்தும் மடுவிற்போல இதிலுமொரு கிறிஸ்தவக்கோயிலைக் கட்டலாமென் றெண்ணிப் போலும் கத்தோலிக்கக் கிறிஸ்தவரும் இந்நிலத்தைத் தம் வாய்விட்டுக் கேட்டார்கள். வயல் தோட்டம் செய்ய இந்த நிலத்திலுள்ள ஆத்திபாரக் கற்கள் இடங்கொடா. வீடு கட்டி வாழலாமென்றால் இது காடு. இதில் வந்து கேட்ட கத்தோலிக்கக் கிறிஸ்தவருடைய சகோதரபாவம் கிறிஸ்தவர்களுக்கே பிரீதிகரமானது. பாரதனமான சைவக்கோ

## எண்பது ஆண்டுகளுக்குமுன்

### ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலரின் நற்சிந்தனை

"யாழ்ப்பாணச் சமயநிலை" என்னும் பிரசுரத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் ஆங்கிரச வருஷ ஐப்பசிமீ (1872) எழுதி வெளியிட்டது.

"தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது; மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்திநாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் இவ்வடமாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதிசமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்தினுள்ளது. இத் திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே. நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச் சிறிதும் நினையாததென்னையோ? இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப்பொருள் சேர்ந்துவிடும்! இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத் திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின், அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகஞ் செய்வர்."

ஒரு சைவக்கோயிலென்பதை கன்றாகக் காட்டும். 'றோயல் ஏஷியாட்டிக் சொசைற்றி' என்னும் கூட்டத்தாருடைய 10-ம் இலக்கப் பத்திரிகையிலும் போக்ஸ் (Mr. Boakes C. C. S.) என்பவரால இது சைவக் கோயிலென்றும் அதின் சில வைபவங்களும் சுந்தரமூர்த்திநாயனார் இத்தலத்தின்மேற் செய்தருளிய தேவார மொழிபெயர்ப்பும் சொல்லப்பட்டிருக்கின்றன. அநேகருடைய ... விளம்பரத்திலும் "திருக்கேதீச்சர ... ரூபாவரையிற்பெறுமென்று நினைத்தார்களே. இவர் மத விஷயங்களிற் பிரவேசியாத பரம சாதுக்கள் என்பது இதுவரையும் சிலருடைய கருத்து. இந்தக் கத்தோலிக்கரைப்போலப் பத்துப்பேர் வந்தாலும் என்ன விலைவந்தாலும் வாங்கவேண்டுமென்பதே இங்குள்ளவர்களுடையதும் செட்டிமார்களுடையவும் கருத்து. மதுரையிலிருந்து வேண்டிய பணமனுப்ப ...

தொடர்ச்சி 4 - ம்பக்கம்

---

### ஊழி முதல்வனுய் நின்ற ஒருவன் ... ...

திருச்சிற்றம்பலம்

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு<br>
மேழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்<br>
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை<br>
கேழில் விழுப்பொருள்கள் பாடினேங்கேட்டிலையோ<br>
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்<br>
ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ<br>
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை<br>
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

---

அரசியல் அலை

# முந்தி வந்த செவியும் பிந்தி வந்த கொம்பும்!

## சமசமாஜக் கட்சியின் - - - - தேர்தல் ஒப்பந்தம்

### ஐக்கிய தேசீயக் கட்சிக்கு ஆபத்தா?

**இந்திய பொதுத் தேர்தலில் கேரள நாட்டில் இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி யொன்றை நிறுவி இந்திய தேசிய மகாசபையை எதிர்க்கின்றனர். இம்முன்னணிக்கு ஓரளவில் ஆதரவு கிடைத்தமை இலங்கை இடதுசாரிகளுக்கு உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறதுபோலும்!**

இடதுசாரிகளுக்குள்ளும் வலதும், வலது குறைந்ததும், ஆகப் பிரிவுகள் பல இருந்து கொண்டே வருகின்றன. ருஷியச் சர்வாதிகாரியிலும் அவரின் அரசியற் கொள்கையிலும் நேசம் வைத்திருப்பவர்கள் தீவிரவாதிகள். பொதுவுடைமைக் கட்சியின் பொதுக் கொள்கையை எடுத்துக் கொண்டு சமயோசிதமாக ருஷிய தேச நேசத்தைப் பெறுவதே தலைசிறந்த நோக்கமுள்ளார் இன்னொரு சாரார். இவர்களுள்ளும் முந்தி வந்த செவியைப் பிந்திவந்த கொம்பு மறைத்த மாதிரிப் பழைய சமசமாஜம், புதுச் சமசமாசம் என்று ஒருபெரும் பிரிவினை!

#### வேற்றுமையில் ஒற்றுமை?

பெரிய பண்பாட்டிலே அரியதொரு அம்சம் வேற்றுமையில் ஒற்றுமை. வேரூன்றிவிட்ட ஐக்கிய தேசியக் கட்சியை அசைப்பது தனிக் கட்சியினால் ஆகாதென் றறிந்த இடதுசாரிகள், அண்ணே! வா!! தம்பி! வா!! என்று எல்லோரையும் அழைக்கின்றார்கள். ஆனால் இதற்கிடையில் திரு. சேனநாயகவின் வலதுகை போனது வருடாவருடம் ஐக்கியதேசியக் கட்சி மேடையில் நின்று இடதுசாரிகளுக்கு வசையும் எச்சரிக்கையும் விளைப்புடைக்கச் சாமாரியாகப் பொழிந்துவந்த திரு. பண்டாரநாயகவும் இந்த ஒற்றுமை ஒப்பந்தத்தில் ஓடோடியும் சென்று கலந்துகொள்ள எத்தனித்தார். ஒப்பந்தம் ஒருவகையில் ஆய்விட்டது. எதற்கு? அரசாங்கத்தை வீழ்த்தச் சமசமாஜக்கட்சிப் பதினன்கு அங்கங்கள் கொண்ட திட்டத்தை ஆதரித்து வந்தால் திரு.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

---

### மா இனும்!

இலவசமாக மக்களுக்கு மா வழங்கும் ஓர் திட்டத்தை அமைக்க அரசாங்கம் ஆலோசிக்கிறது. கிழமைதோறும் கொடுபடுகின்ற அரிசி வாங்கக் காசில்லாதவர்களுக்கே மா இலவசமாகக் கொடுபடும். அன்னவர்கள் தங்கள் அரிசிப் புத்தகங்களை (Coupons)த் திருப்பிக் கொடுக்க வேண்டும். இதனால் அரசாங்கத்துக்குப் பணநட்டம் ஏற்படாதென்றும் அறிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே

இந்துசாதனம்

யாழ். கர ஹூ மார்கழி மீ
உ௦ வ வெள்ளிக்கிழமை

## "மார்கழி நீர் ஆடேல்!"

திருச்சிற்றம்பலத்தின் கண் 'கை காட்டித் தம் முருவங் காட்டாமல்' மறைந்த மணிவாசக மாதவன், திருவண்ணாமலையில் சத்தியை வியந்து புனற்றடம் ஆடல் செய்யும் பொற்றொடியார் புகன்றதாகச் சொன்ன திருவெம்பாவையில் ஈற்றடியில் 'மார்கழி நீர் ஆடேல்' என்று அழகு பெறப் பாடியிருப்பதை மார்கழித் திங்களில் திருவாதிரை அந்தமாய் வரும் ஈரைந்து நாட்களிலும் சைவ நன் மக்கள் நினைவுகூரா திருத்தல் எங்ஙன்!

ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ் சோதியை, தில்லைச் சிற்றம்பலத்துள் ஈசனை, நஞ்சிவனை, வேத விழுப்பொருளை, மாலறியா நான்முகனுங் காணா மலையினை, எங்கோனை, உன்னற்கரியானை, ஊழிமுதலவனாய் நின்ற ஒருவனை, முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளை, வெண்ணீறுடியை, தீயாடுங் கூத்தனை, அடியோங்கட் காரமுதை, கண்ணார் அமுதமுமாய் நின்றானை, யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலரடியானைப் போற்றியாம் மார்கழி நீர் ஆடேல் என்று மணி மணியாக அணிமொழி முத்தங் கொழித்த, சைவ ஞான வாசகம் புகல வந்தவதரித்த திருவாதவூரடிகள் சரித்திரத்தை வைகறைப் பொழுதில் நீராடி நாண் மலர் கொய்து, அரன் கோயில் வலம் வந்து எம்பெருமானை வணங்கி, புலன் வைத்துக் கேட்டால் ஐம்புலக் கள்வர் தம் வலையினின்றும் அகலவும் எடுத்த பிறவிப் பயனை அடையவும் துணையாக விருக்கும் என்று சொல்லவும் வேண்டுங்கொல்! என்னை?

தில்லையில் எம்பெருமானைச் செப்பிய வித் தமிழ் மாலையன்றி, வீட்டுநெறிக்கினிச் சிவ நூல் வேறுளதோ! என்று தில்லைமூவாயிரவர் வியந்து சிரமேற்றாங்கி மகிழ்ந்து போற்றிய திருவாசகமென்னுந் தெவிட்டா இன்பத் தேனார் செந்தமிழ்ப் பாடலை உலகிற் குவந்தளித்த திருவாதவூரடிகள் சரிதையே சிவசரிதை, அன்னார் ஞானமேசிவஞானம், அவர்தம் வாக்கே சிவவாக்கென்று பேரறிஞர் கூறியிருப்பது காண்க!

இத்தகைய மெய்ப்பொருள் உண்மை விளக்கும் புராணங்களைத் திருக்கோயில்களில் உரிய காலங்களிற் படிப்பதும் (பயன்) பொருள் சொல்வதும் பத்தர்கள் சித்த சுத்தமாய்க் கேட்டின்புறுவதும் ஆய வழக்கம் இற்றைநாட் பெரும்பாலாரிடத்திற் காணப்பெறு திருத்தல் கவலைக்கிடமாகின்றது! தமிழ்மொழி எங்கள் தாய்மொழி அதை அரசாங்கமொழி ஆக்குதல் வேண்டுமென்று ஆரவாரஞ் செய்யும் அரசியல் வாதிகள் ஆலயங்களில் அவ்வக்காலங்களிற் படிக்கப்படவேண்டிய புராணங்களையெல்லாம் தவறாது படிக்கவும் பயன் கேட்டுப் பலரும் அறிவை வளர்த்து ஆத்மபலத்தைத் தேடவும்வேண்டிய ஒழுங்குகளைச் செய்து தமிழ் வளர்ச்சிக்காகும் உண்மைப் பணியை ஆற்றுவதை விட்டு நில்லாவுலகில் நில்லாப் புகழுக்கும் நயத்திற்கும் ஆகத் தமிழபிமானங் காட்டுதல் போலியபிமானமாகும்! புராண படனஞ் செய்யுங் காலங்களிற் பயன் சொல்வார் கிடையாமையாற் பல ஆலயங்களிலே இப் புண்ணிய கைங்கரியம் செவ்வனே ஆற்றப்படா தொழிகின்றதைக் குறிப்பிட எமக்கு வெட்கமும், துக்கமுமாயிருக்கின்றது. "வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியுந் தந்த எம் தலைவனைச் சூழ்த்த மாமலர் தூவித் துதியாது மாயவலையிற் றடுமாறி மா நரகிற் புகுதுமதோ?

"நாடி நந்தம ராயின
தொண்டர்காள்!
ஆடுமின்! அழுமின்!
தொழுமின்! அடி
பாடுமின்! பரமன்
பயிலுமிடம் கூடுமின்! ....
.........................."

என்றாங்கு ஆலயந் தொழுது அரனடியார் திருக்கதையறிந்து அறிவும் ஆக்கமும் செறியப் பெறுமின்.

# வாழ்க்கை வானில்

● ● — வளர்மதி — ● ●

போட்டார் இரகம் வந்து நின்றதும் திரு பொதுசனத்திற்குத் தெரிந்து விட்டது ஆரோ அரசியற் கட்சிக்காரர் தான் என்று. மூவர் வந்தனர் ஒருவர் எப்படிச் சுகம்? என்ன வேளாண்மை நலலாய்ப் பலிக்குமோ எனறார். தெரிந்தவர் போலக் கதைப்பவரைத் தெரியாத திரு பொதுசனம். அது நான் அல்ல அடுத்த வீட்டுக்காரர்தான் நீங்கள் தேடுபவர். அவர் இப்போதுதான் வயலிலிருந்து திரும்பி யிருக்கிறார் என்று நழுவுதற் குபாயமாய்ச் சொன்னார். இல்லை உங்களிடம் தான் வந்தோம். நாங்கள் — இந்தக் கட்சிக்காரர் — தெரியாதா? போன தேர்தலில் நீங்கள் செய்த உதவியை மறந்துவிட்டோமென்று நினைக்கிறீர்களா? என்று தொடங்கினார் வந்தவர்களில் வாயாடி.

தம்பி இப்போது எனக்கு வாக்கு மாறுகிற வயது. நேற்றுச் சொன்னதை இன்று மறந்துவிடுகிறேன். என்றாலும் இந்தப் பகுதியில் ஆட்கள் என்னையும் ஒருக்கால் உங்கள் கொழும்புச் சங்கத்துக்குப் போகச் சொல்லுகிறார்கள். கோபித்துக் கொள்ள வேண்டாம் எனக்கு உங்கள் வாக்கைத் தந்துவிடவேண்டும். நான் முந்திச செய்த உதவியை மறக்கப்படாது என்று ஒரு போடுதல் போட்டார். அதென்ன ஒரு கயிட்டமா? நீங்கள் வந்தாலென்ன நாங்கள் வந்தாலென்ன என்று சொல்லி அவருடைய அலுவல் அது என்னோடு என்று ஒருவர் சொல்ல யாவரும் வெளிக்கிளம்பினர்.

x x x

வந்தவர்களை அனுப்பிவிட்டு ஆடு மாட்டிற்குக் குழை பறித்துக்கொண்டு நின்றார் திரு பொதுசனம். செருப்புச் சத்தம் கேட்டது. நால்வர் வந்துகொண்டிருந்தார்கள். திரு பொது சனத்தைப் பார்த்து என்ன கறக்கின்றது மாடு? பசுவளர்க்கும் பழக்கம் நல்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# அணிந்துரை அரங்கம்

### விவேகானந்த நிகதி வெளியீடு

பஞ்சாங்கங்களிலுள்ள முக்கியமான விபரங்களை எல்லாம் சுருக்கமாக அடக்கி நாளாந்தம் நற்சிந்தனையுள்ளவர்களாக மக்கள் மனதிற் பதியக்கூடிய திருக்குறட் பாக்களையும் அப்பாக்களின் கருத்தைத் தெளிவாய் விளக்கும் பொழிப்புக்களையும் அகத்தே அமைத்து விவேகானந்த அச்சகத்தாரால் கண்ணைக் கவரும் நுண்ணிய முறையில் அழகாய் அச்சிடப் பெற்ற நிகதி வெளியீடும் நாளாந்தரக் குறிப்புத் தொகுதியும் (Diary) கிடைக்கப் பெற்றும்.

●

### தமிழ் மகள்

தமிழ்மகள் என்ற நாமத்துடன் பிரசுரிக்கப்பெற்ற ஆண்டு வெளியீடு நங்கையர் நல்வளர்ச்சிக்குரிய பல அரிய கட்டுரைகளையுடையதாய்ப் பெண்கள் உலகத்திற்கு ஒரு வழிகாட்டியாய் வந்த அறிவுச் சுடராய்ப் பிரகாசிக்கின்றது. பெண் இனம் என்றாலென்ன ஆண் இனம் என்றாலென்ன மனித வர்க்கமே. ஆத்மலாபத்தைத் தேடவந்த அனைவரின் இலட்சியமாக வேண்டுமாகையால் பெண்கள், கல்வி அறிவாலும் சொற்றிறம்பா வாழ்க்கை நற்றிறனாலும் உலாமும் ஆண்மகோடிகளும் ஒருங்கு உண்மைவழியில் நிற்பான் உழைக்கவேண்டுமென்னும் பெருங் கொள்கையுடையதிந்தமிழ்மகள் என்பது இவ் வெளியீட்டிற் பொலிந்து விளங்கும் பொருட் பெருக்குடைய கட்டுரைகளால் நன்கு புலப்படும். இதனை வெளியிட்டவர்கள் திருமதி மா. மங்களம் மாலும் திருமதி மா. புவனேஸ்வரிதேவியும் ஆவர்.

### இந்திய தீப்பெட்டிகள்

இலங்கையில் ஏற்பட்டுள்ள தீப்பெட்டி நெருக்கடியை தீர்ப்பதற்காக இலங்கையிலுள்ள தீப்பெட்டி உற்பத்தியாளர் ஒருவர் இந்தியாவிலிருந்து தீப்பெட்டிகள் வரவழைக்கின்றாராம்.

### அரிசி அளவு மாறுமாம்!

நாழியால் அளந்து அரிசிகொடுத்தல் அரசாங்கத்திற்குப்பெருநட்டத்தை விளைவிப்பதால் இனிமேல் இறுத்தல் அளவையால் அளந்து விற்பனை செய்யலாமா என்று அரசாங்க வட்டாரத்தில் ஆலோசனை நடைபெறுகின்றதாக அறிகிறோம்.

# உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன்
கணிப்பது.

எங்கள் சோதிடம்

**இவ்வாரப் பலன்கள் 6—1—52——12—1—52**

**மேடராசி** அச்சுவினி, பரணி, ரம், 1ம் பாதம். கார்த்திகை முதற்கால்.

புதிய முயற்சிகளில் நண்பர்களின் உதவிகைக்காதிருக்கலாம், குடும்ப ஒற்றுமை வளரும்; ஆனாற் செலவு அதிகரிக்கும்; உங்கள் மேற்பார்வையில் வேலை செய்பவர்களோடு அவதானமாக இருக்க வேண்டும்

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகினி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

தொழில் சம்பந்தமான தகராறுகள் இவ்வாரம் நெருக்கடியைத் தருமெனினும் அஞ்சவேண்டியதில்லை; பொறுமையாயிருந்து சமாளிப்பதால் எதிரிகளே பின்வாங்குவார்கள்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

முந்திய வாரத்திலும் நன்மையாக இவ்வாரமிருக்கினும் மனநிம்மதி கிடையாது; பிரயாணத்திற்கும் கடிதப்போக்கு வரத்துக்கும் பொருத்தமாயிருக்கும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

அவதானமாகவும் துரிதமாகவும் இருந்தால் வியாபார விருத்திக்கு நல்ல தருணம்; வாரம் முடியுமுன் வியாபார நிலையத்தையோ வாசஸ்தானத்தையோ மாற்றுதல் நன்று; சாத்திராத சில நயங்கள் ஏற்படலாம்.

**சிம்மராசி** [illegible]

நண்பர்களுடன் நடந்துகொள்வதில் அவதானமாயிருத்தல் நன்று; நீண்டகால நட்பு ஒன்றுக்குப் பங்கம் ஏற்படவுங்கூடும்; தேகநிலை தொந்தரவுதர இடமுண்டு; முக்கியமான அலுவல்களை அடுத்த வாரத்துக் கொதுக்கி வைத்தல் நன்று

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

முதலிரு நாட்களையும் அவதானமாகக்கழித்தல் நல்லது; விவாதப் பேச்சை விலக்கவும்; மற்றைய நாட்கள் நானாந்தர வேலைக்குப் பொருத்தமானவை; குடும்ப ஒற்றுமையும் நண்பராற் சந்தோஷமும் ஏற்படக்கூடும்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம

இவ்வாரம் வியாபார முறையிற் புது நிலைமைகள் ஏற்படக்கூடும்; ஆனால் செவ்வாய் புதனில் சில கஷ்டங்கள் ஏற்படலாம்; பின்னர் வார முடிவு உதவியாயிருக்கும்; புது முயற்சியில் ஈடுபடலாம்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இந்த வாரம் கூடுதலாகச் சிரமப்பட வேண்டும்; என்றாலும் ஒரு சிநேகிதி அல்லது ஒரு சுற்றத்தவர்மூலம் உதவி ஏற்படலாம்; வாரகடைப்பகுதி களியாட்டத்திற்குப் பொருத்தமெனினும் வியாழனும் வெள்ளியும் மிக அவதானமாயிருத்தல் நன்று.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இவ்வார முற்பகுதி புதுக்கருமங்களுக்குப் பொருத்தமாயிருக்கும்; ஆனாற் சனிக்கிழமையன்று தொந்தரவு ஏற்படலாம்; தேக சுகமும் குடும்ப விஷயங்களும் மனவருத்தத்தை உண்டுபண்ணலாம்.

**மகரராசி** உத்தராடம் 2,3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

பிதாவழிச் சுற்றத்தவர்களால் நீங்கள் பொறுமையிழக்க வரினும் வரும்; சச்சரவுகளும் அவதூறுகளும் மன அமைதியின்மை உண்டுபண்ணும்; தேகநலத்தைக் கவனித்தல் அவசியம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

வாரமுற்பகுதியிற் பாரதூரமான தொந்தரவு ஏற்படலாம்; எதொன்றைப்பற்றியும் எவருக்காயினும் வாக்குப் பண்ணுவது கூடாது; வெள்ளிக்கிழமை தொடக்கம் சில கஷ்டங்கள் நீங்கும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

நம்பியிருந்த ஒருவரைப்பற்றி அசஞ்சலமான செய்தி மனத்தளர்ச்சியைக்கொடுக்கும்; தொழில் சம்பந்தமான முறையில் அவதானமாயிருத்தல் நன்று; தேகசுகத்தைப் பேணுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தரோடைத் தமிழ் வித்தியாசாலை

## படத்திறப்பும் பரிசளிப்பு விழாவும்

சென்ற மார்கழி மீ 5 உ (20-12-51) வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு படத்திறப்பு, பரிசளிப்பு, பெற்றோர் தின விழாக்கள் Dr. S. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயின.

தலைவரவர்கள் குறித்த ஸ்தாபகர் திரு. அ. கந்தையா உபாத்தியாயர் அவர்களின் சிறந்த குணங்கள், அவருடைய தொண்டின் பெருமை ஆதியவற்றைப் பாராட்டிப் பேசினர்.

சைவவித்தியாவிருத்திச் சங்கக் காரியதரிசி திரு. சு. இராசரத்தினம் அவர்கள் ஸ்தாபகரின் தொண்டைப் புகழ்ந்து பேசியபின், தற்காலக் கல்வியின் பரிதாப நிலையை எடுத்துக்காட்டித் தமிழ்ப்பிள்ளைகள் சிங்களத்தையும் சிங்களப் பிள்ளைகள் தமிழையுந் தங்கள் தாய் மொழியுடன் கற்க வேண்டுமென்றும் 5-ம் வகுப்புக்குப் பின் ஆங்கிலத்தையுங் கற்கலாமென்றும், இதுவே ஒற்றுமைக்குவழி என்றும் வற்புறுத்திக் கூறினர்.

நியாயவாதி திரு. க. சிவப்பிரகாசம் அவர்கள் சமயக் கல்வி, சைவப் பாடசாலைகள் சமயத்தை வளர்த்தற்குத் தம்முள் ஒத்துழைத்தல் ஆகியனவற்றின் இன்றியமையாமையை விளக்கியபின் திரு. இராசரத்தினம் அவர்களின் சிறந்த தொண்டை ஏனையோர் முன்மாதிரியாகக் கொள்ளவேண்டுமென்றும் விதந்து கூறினர்.

வித்தியாதிகாரி திரு. A. சந்திரசேகரம் அவர்கள் ஆசிரியர் பெற்றோர் தொடர்பு எவ்வாறிருக்கவேண்டுமென்று விளக்கினர். திரு. S. M. அப்புத்துரை அவர்கள் விநாயகனடிகளிலம் அமைக்க முயலுதலையும் பாராட்டினர்.

வித்தியாதரிசி அவர்கள் பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்கினர். பாடசாலைப் பிள்ளைகள் கதம்பக்கச்சேரி யொன்று நிகழ்த்தினர். பிரம்மஸ்ரீ ச. சிவசுப்பிரமணிய ஐயர் அவர்கள் நன்றிகூறப் பாடசாலைக் கீதத்துடன் விழாக்கள் நிறைவேறின.

## முந்திவந்த செவியும் பிந்திவந்த கொம்பும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

பண்டாரநாயகவுடன் என்ன திரு. சேனநாயகவுடனென்ன இடதுசாரிகளின் ஒப்பந்தம் தாராளமாகச் செய்வார்கள்!

“ஐயர் வீட்டிற் கலியாணம் அவர் அவர்வீட்டிற் சாப்பாடு” என்றுங்கு விழ்த்தல் வைபவத்தில் எல்லாரும் பங்குபற்றலாம். ஆனால் தங்கள் தங்கள் கட்சிகளிலேதான் கலை நிரவதும் ஆகாரம் தேடவேண்டியது.

மூன்றுவது மகா யுத்தம் ஆரம்பமானபோது ருஷியாவும் ஜர்மனியும் ஓர் ஒப்பந்தஞ் செய்ததை நேயர்கள் அறிந்திருப்பார்கள். போலந்து தேசத்தைப் பாதி பாதியாக விழுங்கிய பின் ருஷியாவும் ஜர்மனியும் பெரும் போராடியது பழங்கதையல்ல!

புலி வாய் அகப்பட்ட

## வாழ்க்கை வாளில்

2-ம் பக்கத் தொடர்ச்சி

லது என்று சொல்லி முடிக்குமுன் அந்த அலுவலை மாத்திரம் கேட்கவேண்டாம்! பாலுக்கென்று மாடுவாங்கி இறைச்சிக்கு விற்கும் தரகர்மாரைத் தெரியும் எனக்கு என்று காரமாய்ப் பேசினர் திரு பொதுசனம்.

வந்தவர்கள் தங்களுக்குள் பெரியவர் சொல்வது சரிதான். நாங்கள் பால்மாட்டைப்பற்றி விசாரித்தது இந்த இறைச்சி வியாபாரிகளுக்கு மாடுகொடுக்கும் தரகர் என்று நினைத்துவிட்டார் என்று சொல்லி அப்படியல்லப் பெரியவர் நாங்கள் இந்த — க் கட்சிக்காரர்கள். உங்கள் ஆதரவைப் பெறவந்தோம் என்று தொடங்கினர் ஒருவர்.

சகோதரர்களே நீங்கள் வர முன்னம் வேறும் ஆட்கள் வந்தவர்கள். இந்தமுறை நானும் ஒருகாற் கேட்கப்போகிறேன். கோரத்தோடு சொல்லியிருக்கிறேன் என்றார் திரு. பொதுசனம். அதுதான்முறை பெரியவர். எங்கள் கட்சியிற் சேர்ந்து கேளுங்கள் என்று விழுத்திக் கதைத்தார்கள் வந்தவர்கள். பெரியவர் எங்கள் கட்சியிற் சேர்ந்தால் சும்மா இருக்கச் சுகம்வரும், காணியில்லாதவர்களுக்கு காணி. அதைப் படித் தம்பிமாரே என்றார் பொதுசனம்.

காணியுள்ளவர்களிடம் பறித்துக் கொடுக்கிறதுதான் என்ற மறுமொழி வந்ததும் தொடங்கினர் திரு பொதுசனம் ஆக உள்ளது 100 பரப்புக் காணி. அதைப் பங்கிடவா வெளிக்கிட்டுவிட்டீர்கள். உங்கள் கருமத்தைப் பாருங்கள் என்று ஒரே அடியாய் வெட்டிப் பேசினர்.

x x x

கால்முகங் கழுவி விட்டு திரு பொதுசனம் மெல்ல உலாவிக் கொண்டிருந்தத் திரும்பவும் ஒரு கூட்டம் ஆட்கள் வந்தார்கள். என்ன பேசிவைத்து விளையாட்டுப் பார்க்கிறீர்களா? கிழவனுடன் கேலியா? என்று ஆரம்பத்திலேயே கதையை அடக்கிவிடப் பார்த்தார் திரு பொதுசனம். என்ன விஷயம் என்றனர் வந்தவர்கள். இல்லை இன்று மாலை என்னை ஒரு வேலையுஞ் செய்யவிடாமல் எங்கள் கட்சியிற் சேருங்கள் என்று இதுதான் மூன்றும் முறையாய் வந்திருக்கிறீர்கள். கட்சிகட்டுகிற காலம் போய்விட்டது. இப்போது அந்த உலகத்துக்குப் போகிற ஆயத்தஞ் செய்கிறவர்கள் நாங்கள் ஒரு கட்சியுமிதைவிட எனக்குத் தெரியாது. என்று சொல்லித் திரு பொதுசனம் பொல்லாதபோடுதல் போட்டார். இன்னமொரு முறை அப்பாவை வந்து ஆறுதலாகக் கேட்போம் என்று சொல்லிக்கொண்டு மெல்ல நழுவினர் வந்தவர்கள். திரு பொதுசனம் மூன்றுகட்சியினருக்கும் பொது விசனத்தைக் கொடுத்தனுப்பிவிட்டார். தேர்தல் சம்பிரதாயம் இதுதான். இரண்டாம்முறை வருவார்கள்தானே!


# தமிழ் இலக்கிய வரலாறு

ஆக்கியோன்

வி. செல்வநாயகம் M. A.

தமிழ விரிவுரையாளர், பல்கலைக்கழகம் கொழும்பு

தமிழ் இலக்கியப் பரப்பினைச் சுருக்கமாகக்கூறும் இந்நூல் புதுமுறை தழுவி எழுதப்பட்டுள்ளது

கொழும்புச் சர்வகலாசாலைப் பிரவேசபரீட்சை (Univ. Entrance) தமிழ் சேட்டிப்பிக்கேற்று பரீட்சை (Tamil Certificate Entrace) முதலியவற்றிற்கு உதவக்கூடியது

‘The book gives a brief, but neat account of the History of Tamil Literature It will be of immense help to our Tamil students.’

**Prof. S. வையாபுரிப்பிள்ளை**

விலை **3-75**

கிடைக்குமிடம்

**The Sri Lanka Book Depot**

221, K. K, S. Road, Jaffna M 172 4-1&15-1


### அந்தணனின் கதையா!....?

புல்லை வளைந்துப் பொற்காப்புப் போலாக்கிப் பூசகர் ஒருவரை வைத்துக் குளத்தில் வரவழைத்துப் பசி ஆறிய புலிக்கதையும் ஒன்று உண்டு! ஒப்பந்தஞ் செய்தால, பொதுவுடைமைக் கட்சியினர், புதுச் சமசமாசக் கட்சியினர் பழஞ் சமசமாசக்கட்சியினர் தாராளமாகச் செய்துகொள்ளலாம். வேறு வர்க்கத்தைச் சேர்ந்த விடுதலைக் கட்சி ஒப்பந்தஞ் செய்தல் ஒவ்வாத காரியம். இதை அறிந்துதானபோலும் தமிழரசுக்கட்சி ஒப்பந்தம் படிக்கைக்கு மறுத்துவிட்டது!

### மின்சார அதிர்ச்சி

காங்கேசன்துறை வைத்தியசாலையத்தொழிலாளி வைரவன் சின்னவன் என்பவர் மின்சார அதிர்ச்சியில் அகப்பட்ட ஒருவரைக் காப்பாற்றச் சென்றபோது மரணமடைந்ததாக அறியக்கிடக்கின்றது.

காங்கேசன்துறை வைத்திய நிலையத்தில் கடமை ஆற்றிவந்த இரு. கனகரத்தினமும், அவரது மனைவியும் சத்தியாகந்தன் என்பவரும் இவ்வதிர்ச்சியினுல் ஆபத்தான நிலையில் இருந்தனர்என்றும் இப்போது குணமாகி வருகின்றனரென்றும் தெரிய வருகிறது.

ஒரு வானொலிக் கருவியை மின்சாரக் கம்பியினின்றும் பிரித்ததனால் இவ்விபத்து ஏற்பட்டதெனக் கருதப்படுகிறது.

# பழைய மாணவர் கூட்டம்

## பன்னாகம் மெய்கண்டான் பாடசாலை

இக்கூட்டம் 26-12-51 புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மெய்கண்டான் பாடசாலையில் சங்கத்தலைவர் திரு. செ. ஸ்ரீநிவாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் பொ. கந்தையா அவர்கள் உத்தம வாழ்க்கை என்னும் பொருள்பற்றியும், நியாயவாதி அ. அமிர்தலிங்கம் B. A அவர்கள் “இலங்கையின் இன்றைய அரசியல் நிலை என்பது பற்றியும் விரிவுரை யாற்றினர்கள்.

பின்னர் 1952-ம் ஆண்டுக்கான நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. தலைவர் செ. ஸ்ரீநிவாசன் அவர்கள் உபதலைவர்கள் திருவாளர்கள் பொ. கந்தையா, அ. அமிர்தலிங்கம், ந. தியாகராஜன், இணைச் செயலாளர்களாக திருவாளர்கள் இ. தம்பிராசா, அ. ஆறுமுகம் தெரிவு செய்யப்பட்டனர். தனாதிகாரி திரு ப. சி. செல்வநாயகம் அவர்கள்.

மேலும் 16 பேர் நிர்வாக சபையில் இடம்பெற்றனர், சிற்றுண்டி விருந்து நடைபெற்றபின் இப்பாடசாலையில் தொழிற்கல்வி கற்பதற்காக ஒரு கட்டடம் பழைய மாணவர் சங்க உபயமாக 3000 ரூபா திட்டத்துக்குள் அமைக்கப்படவேண்டுமென்ற பிரேரணை சபையாரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டது. திரு. அ. ஆறுமுகம் அவர்களின் நன்றியுரையுடனும் கடவுள் வணக்கத்துடனும் கூட்டம் 6-30 மணியளவில் நிறைவேறியது.


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்

எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
— நகை —
வியாபாரிகள்
= o =

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

விலாசத்தானம்:
63, கன்னதிட்டி.
யாழ்ப்பாணம்.


# Pandatheruppu Village Committee

பண்டத்தரிப்புக் கிராமச்சங்கம்

## Notice Calling for Tenders.

## கிராம வேலை விளம்பரம்

1. மாதகல் ரோட்டில் இருந்து பண்டத்தரிப்பு தெல்லிப்பளை ரோட்டு மண் ரோட்டுப்போடல்.

2. மாதகல் ரோட்டில் இருந்து புன்னாலை கீரிமலை ரோட்டுக் கல்லுப்போடல்.

1. மேற்படி வேலையைக் குத்தகையாக எடுத்துச் செய்ய விரும்புவோர் 1952 ம் ஆ தை மாதம் 17 ந் திகதி பகல் 12 மணிக்கு முன் கிராமச் சங்கத் தலைவருக்கு மனுப்பண்ணல்வேண்டும்.

2. மனுப்பண்ண விரும்புவோர் 1952 ஆ தை மாதம் 17 ந் திகதிக்கு முன் மேற்படி சங்கக் கந்தோரில் ஒவ்வொரு விகித டாப்புப்பத்திரத்திற்கும் ரூபாய் ஐம்பது கட்டிப்பெற்றுக்கொள்ளவேண்டும். சங்கத்தாற் கொடுக்கப்படும் விகித டாப்புப் பத்திரங்களிலேயே மனுச் செய்தல் வேண்டும்.

3. ஒப்பந்தம் எழுதிய பின்னரே விகித டாப்புப் பத்திரப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

4. விகித டாப்புப்பத்திரங்கள் தெளிவாக மையினுல்நிரப்பப்படல் வேண்டும். அழித்தல்கள் திருத்தங்கள் உள்ள இடங்களில் விண்ணப்பக்காரனின் கைச்சாத்திடப் படல்வேண்டும்.

5. விகித டாப்புப்பத்திரம் கடதாசிக் கூட்டில் போட்டு கிராமச் சங்கத் தலைவர்.................... கிராமச்சங்கம் பண்டத்தரிப்பு என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும். கடதாசிக் கூட்டில் இடது பக்க மேல் மூலையில் மேற்படி வேலையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

6 மேற்படி வேலையைப்பற்றிய விபரங்களைக் கிராமச்சங்கக் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

7. குத்தகைகாரனுப் நியமிக்கப்படுபவர் குறித்த வேலையைச் சரியாகவும் ஒழுங்காகவும் செய்வதற்குப் பிணையாய் கேள்வித்தொகையில் பத்திலொரு பங்குப் பணம் கட்டிய பின்னரே ஒப்பந்தம் எழுதப்படும். கிராமச்சங்கத் தலைவரால் குறிக்கப்பட்ட திகதிக்குள் ஒப்பந்தம் செய்யத் தவறின் குத்தகை மறுபேருக்குக் கொடுக்கப்படுவதோடு விகிதடாப்புப்பத்திரப் பணமும் பறிமுதலாக்கப்படும். அத்துடன் குற்றப்பட்ட குத்தகைகாரரின் இடாப்பில் அவர் பெயர் பதியப்படும்.

8. விகிதடாப்புப் பத்திரம் பெற்றோர் மனுப்பண்ணு தொழியின் விகித டாப்புப் பத்திரப்பணம் பறிமுதலாக்கப்படும்.

9. குத்தகையில் குறைந்த கேள்வியை அல்லது எந்தக்கேள்வியையும் ஏற்றுக்கொள்ளக் கிராமச் சங்கம் கடமைப்படுத்திக் கொள்ள மாட்டாது.

10. அரசாங்கத்திற்கு அல்லது ஸ்தலஸ்தாபனங்களுக்கு ஒப்பந்தமாய் வேலை செய்து பிழைப்பட்டவர்களின் மனுப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. கேள்விப்பத்திரங்கள், வடபகுதி உதவி ஸ்தலஸ்தாபன அதிபரால் தயாரிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட கொந்திறாத்துக்காரர்களின் நாமாவளியில பெயர் காணப்படும் கொந்திறாத்துக்காரர்களுக்குமட்டுமே வழங்கப்படும்.

சு நாகமுத்து
பண்டத்தரிப்பு
கிராமச்சங்கத் தலைவர்.

பண்டத்தரிப்பு
கிராமச்சங்கக் கந்தோர்,
28 - 12 - 1951.
M. 170 4—1—52.

## சீமந்து உற்பத்தி

காங்கேசன்துறைச் சீமந்து உற்பத்திச் சாலையில் ஆக்கப்படும் சீமந்தின் அளவு இருமடங்காக்குதற்கு வேண்டிய ஒழுங்கு செய்யப்படுகின்றது. இந்த ஒழுங்கின்படி நாளொன்றுக்கு 500 தொன் சீமந்து உற்பத்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத் திருப்பணிக்கு அடிகோலிய ஆன்றோர்

1-ம் பக்கத் தொடர்ச்சி

கொழும்பிலிருந்து வேண்டிய பணமனுப்ப ஆயத்தமென்று தந்தி வந்தது. காலியிலிருந்தும்வந்தது. இங்குள்ளவர்களும் தங்கள் பணப்பைகளை அவிழ்க்கப்பூரணசித்தம் உடையவர்களா யிருந்தார்கள். இப்படியெல்லாம் இருந்தும் கத்தோலிக்கருடைய மதிப்பும் கேள்வியும் மூவாயிரத் தைம்பது ரூபாவுக்கு மேலே போகவில்லை. இறுதியில் ஸ்ரீ பழனியப்ப செட்டியாருடைய கேள்விப்படி மூவாயிரத்தொருநூறு ரூபாவாக மூன்றும்முறைகூறி அவருக்குக்கொடுக்கப்பட்டது. உடனே அன்பர்களெல்லாரும் ஆனந்தபாஷ்பம் சொரியக் காதலகோஷஞ் செய்தார்கள் தேவர்கள் கற்பகப்பூமாரி பெய்ததுபோலச் செட்டியார் ரூபாவைக் கட்டிவிட்டனர்.

இந்தத் திருக்கேதீச்சரம் இப்பொழுது எங்களுடைய நிலமாய் விட்டது. இனி எங்களுடைய பழைய கோயிலைக் கட்டுவதற்கு ஆரம்பிக்கத் தடையில்லை. இதோ எல்லா லிங்கங்களுள்ளும் விசேஷமாகிய சுயம்பு மூர்த்தி எழுந்தருளியிருக்குமிடம். இந்த நிலத்தில் ஒரு சிறுமணலையேனுமுடையவர்களுக்குச் சிவலோகத்தில் நிய்யாமாயிருக்கப் பெரிய இடமுண்டு. இங்குள்ள மூர்த்தி ஆவாகனஞ் வேண்டாதே பிரசன்னராயிருந்து அருள்செய்பவர். இங்கே இறப்பவர்களெல்லாருக்கும் சிவபெருமான் வலக்காதிலே பிரணவோபதேசம் செய்வரென்று தக்ஷிண கைலாச மான்மியத்திற் சொல்லப்பட்டது. சுந்தரமூர்த்திநாயனாரருளிச்செய்த தேவாரத் திருப்பதிகத்தில் "பாலாவியின் கரைமேற் றிடமாயுறைகின்றான் திருக்கேதீச்சரத்தானே" என்றும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகத்தில் "கேதீச்சரம் பிரியாரே" என்றும் அருளிச்செய்யப்பட்டது. அவரங்கே திடமாயுறைகின்ற அந்த விசேஷமே இப்பொழுது இந்த நிலத்தை இவ்வளவு சொற்பவிலையில் எங்களுக்கு ஆக்கியது. அருள்வாக்கொன்றும் பொய்ப்பதில்லை. திடமாயுறைகின்றான் கேதீச்சரம் பிரியார் என்ற அந்தத்திருவாக்கும் பொய்க்காது, பொய்க்காது, ஒருகாலும் பொய்க்காது. சுவாமி அங்கே பிரசன்னராய் எழுந்தருளியிருக்கிறார்.

இப்படிப்பட்ட ஒரு நிலத்தை வாங்கவும் அதிலொரு கோயிலைக் கட்டவும் அதுவும் நிலமாயிருந்த ஒரு கோயிலைக் கட்டவும் பூர்வ சென்மங்களில் நாங்கள் எவ்வளவு தவஞ்செய் திருத்தல் வேண்டும். இந்த ஈழதேசத்திலே அருமருந்து இருக்கவும் அதை அருந்தாது இந்தியாவிலுள்ள கோயில்களுக்கு ஓடியோடிப்போகின்றோம் அதனால் அங்குள்ளவர்களும் ஏதோ கொஞ்சம் தங்களைப் பெரிதாக எண்ணிக்கொள்ளுகின்றார்கள். அங்குள்ளவர்தான் இங்குமிருக்கிறார் இங்கிருக்கிறவர்தான் அங்குமிருக்கிறார். அங்குள்ளவருக்கு உள்ள புராணங்களும் தேவாரங்களும் இங்குள்ளவருக்கும் இருக்கின்றன. இங்குள்ளவருக்கு உள்ள அவை அங்குள்ளவருக்கும் இருக்கின்றன. இம் மகிமையை அறிந்து இந்தச் சிவாலயத் திருப்பணியைநடத்துந் திறமையுடையவர் இங்குப் பலரிருப்பினும் நாட்டுக்கோட்டைச் செட்டிமாரளவு இதில் கைவந்தவர் மிகச் சிலரே. அதனால் இன்று வந்தவர்களெல்லாரும் அவர்கள் பேராலே வாங்கித் திருப்பணியை நடத்தும்படி விட்டிருக்கிறார்கள். செட்டிமாரிடங்கொடுக்கும் பணம் மோசம் போகாதென்பதற்கு நாம் யோக்கியதா பத்திரம் கொடுக்க வேண்டியதில்லை. சிதம்பரம், மதுரை, திருவாரூர் முதலான தலங்களே கையோங்கிச் சாட்சியம் பகர்கின்றன. அவர்கள் மூலமாகவே இத்திருப்பணி நடக்கப்போகின்றதென்பதை மாத்திரம் அறிவிக்கின்றோம். மதுரைத் திருநகரங்கண்ட பாண்டியராசன்போல இத்தலத்தைச் செட்டிமார் புதுக்குவித்துச் சிவாலய விதிப்படி பூசை

க்கை ஏற்படுத்திப்பூசை முதலானவைகள் செய்வித்து வருவாராயின் இது சீக்கிரத்தில் பெரிய நகரமாய்விடும்.

இங்கு நகரத்துக்குச் சமீபத்தில் 'ஜையன்றஸ்ராங்கு' என்னும் பெரிய குளமிருக்கிறது. வயல் நிலமாக்கத்தக்க பெருநிலங்களுமிருக்கின்றன. குடியிருக்க நல்ல இடங்களுமிருக்கின்றன. இது சீக்கிரம் பட்டணமாக வேண்டும் இங்கே வைப்பள்ளிக்கூடங்கள் வேண்டும். மடங்கள் வேண்டும். குளங்கள் வேண்டும். சோலைகள் வேண்டும். புத்தகசாலை வேண்டும். பிரசங்க மண்டபம் வேண்டும். அத்தியயன சாலை வேண்டும். நாங்களும் எங்கள் பிள்ளைகளும் போய் அங்கே குடியேறவேண்டும். அதனால் நவர் மென்டும் நயமடைதல் வேண்டும்.

சோபனகரமான இவ்வெத்தீசு நடந்தவுடன் ஸ்ரீ இராகவப்பிள்ளை எல்லாருக்கும் சர்க்கரை வழங்கினர். சிவன் கோயிலில் பெரிய மணிகளெல்லாம் கணகணவென்று ஒலித்தன. சேர் ஆதர்ஹவலக் தேசாதிபதியவர்களுடைய காலத்திலே மென் துலைவனத்துரை ஏசண்டராயிருக்குங் காலத்திலே நமக்கு இத்தலம் கிடைத்தது. அதனால் அத்தேசாதிபதியவர்களுக்கும் துலைவனத்துரைக்கும் உபசாரம் சொல்லுகிறோம். இத்தலம் மிக முக்கியமாகத் தொன்றுதலால் சைவர்களெல்லாரும் இதற்கு உதவ வேண்டும், உதவவிரும்புபவரெல்லாரும் ஷெ ராம. அரு. அரு. பழனியப்ப செட்டியாருக்கும் ராம-மெ-சித. இராமன் செட்டியாருக்கும் அனுப்பலாம். நம்முடைய இத்தேகமிருக்கும்போதே தம்மைத் தரிசிக்கத் திருக்கேதீச்சரப் பிரபு அருள் செய்வார். முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ என்றார் சேக்கிழார் நாயனார்.

இக்கோயிற் றிருப்பணிக்காக இவ்வூரில் ரூபா 2:000 வரையில் சேர்ந்திருந்தது. "அங்கத்துறு நோய்களடியார் மேலொழித்தருளி" என்றும் "ஊனத்துறு நோய்களடியார் மேலொழித்தருளி" என்றும் சுந்தரமூர்த்தி நாயனாரால் தேவாரத்தில் அருளிச் செய்யப்பட்டவற்றால் இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் கௌரிநாயகி அம்பாசமேத கேதீச்சரமூர்த்தி மாறாத பல பெரும் ரோகங்களை யெல்லாம் மாற்றியருளுவர்.

[1894 - ம் வருடம் தை மாதம் 24-ம் தேதி முதல் ஆவணி 22-ம் தேதிவரை வெளியான இந்து சாதனப்பத்திரிகைகள்சிலவற்றிலிருந்து அநுவதித்தவையாகும்.]

விஜயஹூ தைமீ (1894) யாழ்ப்பாணத்திலிருந்து ஸ்ரீ. சி. த மு. பசுபதிச் செட்டியாரும் சின்னவர் முதலான மேசன்மாரும் கூலியாட்களும் திருக்கேதீச்சரம் சென்று வாஸ்து சாந்தி கிராமசாந்தி முதலிய கிரியைகள் செய்து காடுவெட்டிச் சோதித்த போது அகப்பட்ட கிணறு இறைத்துச் சேறு அள்ளியபின் நல்ல சலமுடையதாயிருந்தது. இதுகாறும் இதுவோ அதுவோ எனச் சந்தேகித்துப் பரிசோதித்து வந்த இத்திருக்கேதீச்சரத்தினது அஸ்திபாரஸ்தானம் ஒருவாறு அகப்பட்டது சுற்றுப்பிரதிஷ்டாலிங்கமும் ஒன்று அகப்பட்டது. ஆலயம் இருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டு, அதிலுள்ள மண்மேட்டை எடுத்த போது இந்த ஸ்தலத்தின் தென் மேற்புறத் திருமதில்கள் காணப்பட்டன. அம்மதில்கள் அப்பொழுதிருந்த மண்மேட்டில் ஏழு முழத்துக்குக்கீழே அதன் கீழ் நிலமட்டத்திலிருந்து பதினைந்துமுழ உயரமுடையதாகத் தோற்றின. இவை அடியிற் கருங்கல்லாலும், மத்தியில் முதிரைக்கல்லாலும், அதன் மேல் செங்கல்லாலும் கட்டப்பட்டிருந்தன. மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்றும் காணப்பட்டது. 1894 - ம் வருடம் தைமாத முதல் ஆவணி மாதம்வரை பரிசோதனையில் மாத்திரம் எண்ணூறு ரூபாவரை செலவாயிற்று.

* * *

"நம்மவர்களோ காரிய பாகங்களில் எதிற் பிரவேசித்தாலும் ஏதோ ஒரு வழிவகையால் தலைத்தானம் பெறுதலை இயல்பாகவுடையவர்கள். அதுபோல மேற்படி ஸ்தல நிலம் வாங்கப்பட்டது நம்மவர்கள் திரவியங்கொண்டேயாம். ஆதலால் திருப்பணிக் காரியத்திலும் அஸ்திபாரத் திருப்பணியும் நம்மவர்களால் நடைபெறுவதே முறையும் பெருமையுமாகும்."

(தொடரும்.)

## தமிழ்மொழி வழக்கு நுட்பம்

### "புகலியர்கோன்"

[இக்காலத்திலே தமிழ்ச் சொற்களையும் வாக்கியங்களையும் பேசும்போதும் எழுதும்போதும் தமிழ்மொழி மரபு இலக்கணம் முதலியவற்றோடு முரண்பட உபயோகிக்கப் பலர் தலைப்பட்டுக் கொண்டனர்; இப்பெருந்தவற்றினை இயன்றமட்டுந் திருத்தி உபயோகிக்கச் செய்யவேண்டுமென்பதே எமது வேணவா; தமிழறிந்தார் தமிழ்மொழியுபயோகத்திலே நமக்குப்புலப்படும் பிழைகளை உடனுக்குடன் குறித்து எமக்கு அனுப்பி வைப்பரேல், அவற்றையுஞ் சேர்த்துத்திருத்தி வெளியிடலாகும்].

அ - (2)

அசண்டை - சாதுவான இயல்பு, வேசமின்மை; இச் சொல் இலக்கியச் சொல்லன்றெனினும் அலட்சியம் என்ற பொருளில் யாழ்ப்பாணத்திற்பெரிதும் வழங்குகின்றது.

அசதி - இது ஒரு இடையனுடைய பெயர், இவன்மீது ஒளவையார்பாடியகோவை அசதிக்கோவை யெனப்படும் (2) நெறியற்றவள்; (3) சிரிப்பு; ஆனால் இந்நாட்டில் இச்சொல் மயக்கம் தூக்கம் என்னும் பொருள்களிற் பேச்சளவில் வழங்குகின்றது; அசப்பியம்- அசப்தம், சபையிற் பேசவொண்ணாத சொல்; இது இந்நாட்டிலே இக்கருத்திற் பெரிதும் வழங்கும் இலக்கியச் சொல்லாகும்.

அசல் - அயல் என்னுஞ் சொல்லின் திரிபு; இன்னும் கொசு, சிலை, பூமி யென்னும் பொருள்களிலும் வரும்; ஆனால் இங்குள்ளார் சிலர் இச்சொல்லை, திறமான, உத்தமமான என்னும் பொருளில் உபயோகிக்கிறார்கள்; இது ...

அகப்பு - இது உவவு என்னும் பொருளில் இந்நாட்டில் வழங்குவது;

அஞ்சு - பயப்படு, கவறுடுவோர் சொல்லுங் குழூக்குறி, பிரார்த்தித்தல், போதல், வணங்குதல், வளைதல் முதலிய பல பொருளில் வரும். ஐந்து என்னும் இலக்கப் பொருளில் அஞ்சு என்பது பேச்சிலும் செய்யுளிலும் வழங்குகின்றது; வசனமெழுதுவோர் ஐந்து என எழுதுதல் மரபாம்.

அடகு - இலைக்கறி, கடன்வாங்குவோர் ஈடாகக் கொடுக்கும் ஆபரணம் முதலிய சங்கமப் பொருள்; "ஆபரணம் வைத்தடகு தேடு பொருள்" - திருப்புகழ்; இச் சொல்லை இக்காலத்துள்ளார் அடைவு எனப் பிழையாக வழங்குகின்றனர்.

அடங்க - உட்பட, முழுவதும் என்னுங்கருத்திலும் இந்நாட்டில் வழங்குகின்றது, "ஊரடங்கநோய்" என்பதுபோல.

அடங்கவும், அடங்கலும் என்னுஞ் சொற்கள் முழுவதும் என்னும் பொருளிலும் வரும் இலக்கியச் சொற்கள். இந்நாட்டிற் பெரிதும் வழங்குவன.


## பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ருபா 2-00

பிரதோஷவிரத மான்மியம் (புதிய பதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40

வில்லி பாரதம் - புட்ப யாத்திரைச் சருக்கம் பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள்விளக்க விரிவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ் ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரு 1—25ச.

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு. நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புக்களுக்குச் செய்யுட் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன் மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயபாடப் பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரு. 1—20 ச.

உலகம்பலவிதக் கதை I. (கோபால நேசரத்தினம்) ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத் தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச.

ஈழமண்டல சதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் விலை ரு. 1-00

சைவ சமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றுயுள்ளது. விலை ச 45.

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத் தகது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணா 10)

முற்பண மனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarponnai, Jaffna.

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை;

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை

சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

| திறமான | திறமான |
| --- | --- |
| தேக்கமரங்கள் | ருனிமார்க்ஓடுகள் |
| பல தினிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2



Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday, January 4, 1952.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org